[பேரவைத் தலைவர்] [2024 பிப்ரவரி 21

மற்றும் 2024-2025 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பணிகள் குறித்த விவரங்கள் PDF வடிவத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் இருக்கைக்குமுன் உள்ள சிறு கணினிகளில் தனித்தனியே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

5. தகவல் கோரல்

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், யானைகள் தாக்கி மனித உயிரிழப்பு, நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டில் மட்டும் என்னுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் யானைகளால் தாக்கப்பட்டு 13 பேர் உயிரிழந்துள்ளனர். வேப்பனஹள்ளி தொகுதியில் மட்டும் ஒரு பெண் உள்பட 5 பேர் உயிரிழந்ததோடு, ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். காரணம், வனப் பகுதியை ஒட்டியுள்ள பகுதிகளில் முழுமையாக மின்வேலிகள் போடப்படவில்லை. மின்வேலிகள் போடுவதை அரசு ஒரு சிறப்புத் திட்டமாகக் கொண்டு வந்து மின்வேலிகளை அமைக்க வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், வனப் பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களில், இரவில் யானைகள் வருகின்றபோது, அங்கு வசிக்கிற மக்களுக்குத் தெரிவதில்லை. அதனால், அந்தப் பகுதியில் உயர் கோபுர மின் விளக்குகளை அமைக்க வேண்டும் என்பதோடு, யானைகள் விளைநிலங்களில் விளைகின்ற பயிர்களை நாசம் செய்துவிடுகின்றன. டெல்டா மாவட்டங்களில் பயிர்களுக்கான காப்பீட்டுத் தொகையை அரசே வழங்குகிறது. அதேபோல, வனப் பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களின் உரிமையாளர்களுக்கும், அந்த நிலங்களுக்கும் அரசே காப்பீடு தொகையை வழங்க வேண்டும். பாதிப்புகள் ஏற்படுகின்றபோது, காப்பீடு தொகைகள் மூலமாக அவர்கள் பாதிப்பிலிருந்து மீண்டுவரக்கூடிய வாய்ப்புகளை வழங்க வேண்டும். அந்தப் பகுதியில் நீண்ட நாட்களாக போதிய வனக் காவலர்கள்

2024 பிப்ரவரி 21] [திரு. கே.பி. முனுசாமி]

இருப்பதில்லை. அவர்களுக்குள் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்வதற்கான தகவல் பரிமாற்ற உபகரணங்கள் இல்லை.

முற்பகல் 11–35

எனவே, அந்தப் பகுதிகளில் வனக் காவலர்களைக் கூடுதலாக நியமனம் செய்து, அவர்கள் உடனடியாகத் தகவல்களைத் தெரிந்துகொள்ள ஏதுவாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். யானை தாக்கி, உயிரிழப்பு ஏற்பட்ட பிறகுதான் அதுகுறித்த தகவல் வனத் துறைக்கே தெரிகிறது. அதற்குப் பிறகுதான், வன அலுவலர்களோ, அதிகாரிகளோ சம்பவ இடத்திற்கு வருகிறார்கள். எனவே, யானைகள் எங்கெங்கு செல்கின்றன என்ற விவரத்தை அவர்கள் முன்கூட்டியே அறிந்துகொள்கிற வகையில், அவர்களுக்கு உரிய instruments–ஐ வழங்க வேண்டும். மேலும், வனக் காவலர்களையும், வன அதிகாரிகளையும் கூடுதலாக நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதேபொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. ச. சிவகுமார், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து, திரு. வி.பி. நாகைமாலி மற்றும் திரு. மா. சின்னதுரை ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனை தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், இப்பொருள் குறித்து விரிவாகப் பேசிவிட்டார்கள். எனவே, பேச வருகின்ற மாமன்ற உறுப்பினர்கள், தகவல் கோருகின்ற வகையில் சுருக்கமாக தங்களுடைய கேள்விகளைக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களைப் பேச அன்புடன் அழைக்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வனச் சரக பகுதியில் சில தினங்களுக்கு முன்பு திருமதி அஸ்வத்தம்மா, க/பெ. வெங்கடேசப்பா, திருமதி வசந்தம்மா, க/பெ. ஆனந்த் ஆகிய இரண்டு கூலித் தொழிலாளி பெண்கள் காட்டு யானை தாக்கி உயிரிழந்திருக்கிறார்கள். இது மிகவும் வருத்தமும், வேதனையும் அளிக்கிற சம்பவமாகும். விலைமதிப்பற்ற மனித உயிர்கள் யானைகள் மற்றும் வன விலங்குகளால் தாக்கப்படுவதும்,

உயிரிழப்பு ஏற்படுவதும் மிகவும் கவலையளிப்பதாகவே உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்த இரண்டு பெண்மணிகளின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாயை இழப்பீடாக வழங்கியிருக்கிறார்கள்.

கிருஷ்ணகிரி, தருமபுரி, பாலக்கோடு, பென்னாகரம் ஆகிய பகுதிகளிலெல்லாம் காட்டு யானைகள் அத்துமீறி கிராமங்களுக்குள், வீடுகளுக்குள் நுழைவதும், மனிதர்களைத் தாக்குவதும், விளைநிலங்களில் புகுந்து கரும்பு, சோளம் உள்ளிட்ட பயிர்களைச் சேதப்படுத்துவதும், காட்டுப்பன்றிகள், மான்கள், மயில்கள் போன்றவை பயிர்களைச் சேதப்படுத்துவது போன்ற சம்பவங்களால் பொது மக்கள் மிகவும் அவதிப்பட்டு வருகிறார்கள். எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், வனத் துறையும் கூடுதல் அக்கறையோடு கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து பென்னாகரம் தொகுதி, காவிரியாறு வரையில் வனத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் சூரிய ஒளி மின்வேலி அமைக்க வேண்டும். அதுதான் இதற்கு நிரந்தரத் தீர்வாக அமையும். அதை நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, உயிரிழந்த இரண்டு பெண்மணிகளின் குடும்பத்தினருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும், கூடுதல் நிதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள், ஒரேபொருள் குறித்ததுதான்; சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில்தான் இரண்டு பேர் யானை தாக்கி இறந்திருக்கிறார்கள். என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தேன்கனிக்கோட்டை வனச் சரகத்தில் கடந்த 18-2-2024 அன்று ஒற்றை யானை தாக்கி, அன்னியாலம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி வசந்தம்மா, க/பெ. ஆனந்த் மற்றும் தாசரப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திருமதி அஸ்வத்தம்மா, க/பெ. வெங்கடேசப்பா ஆகிய இரு பெண்மணிகள் உயிரிழந்திருக்கிறார்கள். அதேபோன்று, திரு. ராம்ஜி மற்றும் திரு. சக்கரபாணி ஆகிய இரண்டு கூலித் தொழிலாளர்கள் பலத்த காயங்களோடு, தற்போது மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, நான்கு பசு மாடுகள் யானைகள் தாக்கி உயிரிழந்திருக்கின்றன. இவை ஒரு தொடர் சம்பவமாக நடைபெற்று வருகின்றன. என்னுடைய தளி தொகுதியில், இந்த ஓராண்டில் மட்டும் யானைகள் தாக்கி 14 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்; 44 கால்நடைகள் உயிரிழந்திருக்கின்றன; 3,284 விவசாயிகளுடைய பயிர்கள் சேதம் அடைந்திருக்கின்றன. ஆகவே, அந்த ஒற்றை யானையை கும்கி யானை கொண்டு குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளியேற்றவும், வனப் பகுதியையொட்டி கம்பிவட மின்வேலி அமைத்துத் தரவும், விவசாயிகளுடைய பயிர்ச் சேதத்திற்கு இழப்பீடு வழங்க அவர்களை பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

***திரு. மா. சின்னதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு யானைகள் விவசாய நிலங்களில் புகுந்து, தொடர்ந்து மிகப்பெரிய பாதிப்புகளை விவசாயிகளுக்கு ஏற்படுத்துகிறது. யானைகள் வழித்தடம் இருக்கின்ற பாதைகளில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருப்பதும் இந்தப் பிரச்சினை தொடர்ந்து ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. முறையாக வேலிகள் அமைத்து, விவசாயிகள் பாதிப்பு இல்லாமல் இருப்பதற்கு, வனத் துறை நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். பாதிக்கப்பட்டிருக்கிற அந்த குடும்பங்களுக்கு உதவிட வேண்டும். மருத்துவமனைகளில் இருப்பவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு உதவிட வேண்டும். தொடர்ந்து காட்டு விலங்குகளிடமிருந்து மனிதர்களையும், வேளாண்மையையும் பாதுகாப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தளி, ஓசூர், வேப்பனஹள்ளி ஆகிய*

[திரு. ஒய். பிரகாஷ்] [2024 பிப்ரவரி 21

சட்டமன்றத் தொகுதிகளில் யானைகள் தாக்குதல் பிரச்சினை அதிகமாக இருக்கிற காரணத்தினால், தொடர்ந்து உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடந்த காலத்தில் ரூ.4 இலட்சமாக இருந்த இழப்பீட்டுத் தொகையை ரூ.5 இலட்சமாக மாற்றினார்கள். தற்போது அதனை ரூ.10 இலட்சமாக உயர்த்தித் தந்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், கர்நாடக மாநிலத்திலிருந்து தொடர்ந்து யானைகள் நம்முடைய பகுதிக்கு வரக்கூடிய காரணத்தினால், அதனைத் தடுப்பதற்குண்டான முயற்சியை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் கேள்விக்கான எனது பதில் வருமாறு:

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, மஹாராஜா கடை பிரிவு beat-ல், கடந்த 17-1-2024 அன்று திருமதி மம்தா, 29-1-2024 அன்று திரு. சாம்பசிவம், 1-2-2024 அன்று திரு. இராமப்பா ஆகிய மூன்று பேர் பரிதாபமாக யானை தாக்கி உயிரிழந்திருக்கிறார்கள். இவர்களுக்கு முதற்கட்டமாக ரூ.50,000 நிதி வழங்கப்பட்டிருக்கிறது. இதுமட்டுமல்லாமல், விரைவில் வாரிசுச் சான்றிதழ் பெற்றவுடன், மீதமுள்ள ரூ.9,50,000 தொகை வழங்கப்படவுள்ளது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோன்று கடந்த வருடம், இதே பகுதியில் 24-12-2023 அன்று திரு. முனிரத்தினம் என்பவரை யானை மிதித்ததால், வலது கால் முறிவு ஏற்பட்டு, படுகாயம் அடைந்தார். இவருக்கு முதற்கட்டமாக கிட்டத்தட்ட ரூ.60,000 நிவாரணமாக வழங்கப்பட்டது. அவரின் நிரந்தர இயலாமையைக் கருதி, அதாவது permanent incapacitation-ஐக் கருதி, உயிரிழந்தவர்களுக்கு வழங்குவதைப் போலவே, மீதமுள்ள ரூ,4,40,000 நிவாரணத்தையும் விரைவில் வழங்கவுள்ளோம்.

2024 பிப்ரவரி 21] [டாக்டர் மா. மதிவேந்தன்]

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வனக் கோட்டம், ஜவளகிரி வனச் சரகத்திற்குட்பட்ட தேன்கனிக்கோட்டை தாலுகாவிலுள்ள, அதாவது தளி தொகுதியிலுள்ள அன்னியாலம் கிராமத்தைச் சார்ந்த திருமதி வசந்தம்மா 18-2-2024 அன்று யானை தாக்கி பரிதாபமாக உயிரிழந்தார். அதே தேதியில் தேன்கனிக்கோட்டை தாலுகா, தாசரப்பள்ளி கிராமத்தைச் சார்ந்த திருமதி அஸ்வத்தம்மா என்பவரும் யானை தாக்கி பரிதாபமாக உயிரிழந்தார். இவர்களது குடும்பத்தினருக்கு முதற்கட்டமாக ரூ.2 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.8 இலட்சம் வாரிசுச் சான்றிதழ் உறுதி செய்யப்பட்டவுடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நம் கழக ஆட்சியில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், கிட்டத்தட்ட இரண்டு முறை இருமடங்காக இந்த நிவாரணத் தொகையை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ரூ.4 இலட்சமாக இருந்த நிவாரணத்தை ரூ.5 இலட்சமாகவும், பின்பு இந்த வருடம் ஜனவரி மாதம் ரூ.5 இலட்சமாக இருந்த நிவாரணத் தொகையை ரூ.10 இலட்சமாகவும் அதிகப்படுத்தியுள்ளார் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இரு நபர்கள் திரு. சக்கரபாணி, திரு. ராமு ஆகியோரும் காயம் அடைந்துள்ளார்கள். அவர்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு, தேவையான நிவாரணம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல், ஒவ்வோராண்டும் இந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 10 நபர்கள் யானை தாக்கி உயிரிழக்க நேரிடுகிறது. இதில் பல்வேறு நடவடிக்கைகளை, அரசு தொடர்ந்து எடுத்துக்கொண்டு வருகிறது. உயிர்ச் சேதங்கள் மட்டுமல்லாமல் மற்ற பல்வேறு பிரச்சினைகளும் இருக்கின்றன. பயிர்ச் சேதம், வீடுகளுக்கு சேதம், கால்நடைகளுக்குச் சேதம் போன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. ஒரு பால் மாட்டுக்கு ரூ.30,000 வழங்கப்படவுள்ளது. ஓர் ஆட்டுக்கு ரூ.3,000 நிவாரணம் வழங்கப்படவுள்ளது. பயிர்ச் சேதத்தை ஒப்பீடு செய்து, ஒரு ஏக்கருக்கு ரூ.25,000 தொகை வழங்கப்படும். ஒரு kutcha house குடிசை வீட்டிற்கு ரூ.10,000-ம், ஒரு சிமென்ட் வீட்டிற்கு ரூ.95 ஆயிரம் நிதியும் வழங்கப்படும்.

இதுமட்டுமல்லாமல், இந்த இரண்டு யானைகளால் ஏற்பட்ட பிரச்சினைக்கு, கிட்டத்தட்ட 30 நபர்கள் கொண்ட

ஒரு குழு அமைக்கப்பட்டது. வனத் துறை அதிகாரிகள், அந்தப் பகுதியிலிருக்கக்கூடிய பொது மக்கள், வேட்டைத் தடுப்புக் காவலர்கள் ஆகிய 30 நபர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் தீவிரமாக கண்காணிப்பு செய்கிறார்கள். இவையல்லாமல் 3 நபர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அந்த யானைகளுக்கு தலைமை வன உயிரினக் காவலரின் அனுமதி பெற்று, மயக்க ஊசி போடப்படவுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

மிக முக்கியமாக, இந்த காவேரி வடக்கு வன உயிரின சரணாலயம், கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் தூரம் உள்ள பகுதியாகும். தளியிலிருந்து ஆரம்பித்து ஜவளகிரி, ஊடேதுர்க்கம் ஆகிய பாதைகளில்தான் மிக அதிகமாக யானை மோதல்கள் தொடர்ந்து ஏற்படுகின்றன. இப்போது, இந்த 100 கிலோ மீட்டரில், தற்போது 40 கிலோ மீட்டருக்கு பல்வேறு தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. 2022–2023 ஆம் ஆண்டில் இரும்பு வடக் கம்பிகள் (steel wire ropes) மாவட்ட கனிம வள நிதியுதவியுடன் ரூ.1.75 கோடி செலவில் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு வேலிகளாகப் போடப்பட்டுள்ளன. அதேபோல, 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு வேலி அமைப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. கூடுதலாக மாவட்ட கனிம வள நிதியுதவியுடன் ரூ.2 கோடி மதிப்பீட்டிற்கு 7 கிலோ மீட்டர் தூரத்தில் வேலிகள் அமைக்க கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், ஆங்காங்கே கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு தொங்கும் சூரிய மின்வேலி கம்பிகளும் அமைக்கப்படவுள்ளன. இதுமட்டுமல்லாமல் கிட்டத்தட்ட 300 கிலோ மீட்டர் நீளமுள்ள வன எல்லையில் யானை புகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன. சில யானை புகா அகழிகளைப் பராமரிக்கவுள்ளோம். மற்ற உறுப்பினர்கள் சொன்ன கோரிக்கைகளையேற்று, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, கருத்துரு பெற்று, வருங்காலங்களில் அதற்கான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.